கொச்சின் சந்தையின் மொத்த காய்கறி விற்பனையாளரின் வெற்றிக் கதை:



**திரு. என்.எம்.சமீது,**
**எம்.ஆர், காய்கறிகள், மொத்தவியாபாரி,**
**எர்ணாகுளம் சந்தை, கொச்சின்ஃ**
**அலைபேசி எண்: 09847033777.**

**வியாபார குறிப்பு:**

என் பெயர் என்.ஹட்.சமீது, வயது 38, எனக்கு 15 வருட அனுபவமுள்ளது. நான் எர்ணாகுளம் கடை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர். நான் மொத்தவியாபாரம் செய்து வருகிறேன். எனது வேலை நேரம் காலை 5.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை. என்னிடம் வாங்குபவர்கள் சிறுவியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், உணவு விடுதியாளர்கள் மற்றும் பொதுவான நுகர்வோர்கள்.

**தினசரி சந்தை நிலவரத்தின் (DMI) விசாலமான தகவல் தொடர்பு கட்டடைப்பு வசதிகள்:**

எனக்கு தேவையான சரக்குகள் பெரும்பாலும் மேட்டுப்பாளையம், ஒட்டன்சத்திரம், புளியம்பட்டி, ஊட்டி, மைசூர் மற்றும் பெங்களூர், நாச்சிபாளையம் மற்றும் பூனேவில் இருந்து பெரிய வெங்காயம் போன்ற இடங்களிலிருந்து பெறுகிறேன். இத்தனை வருடங்களாக நான் எனக்கு தேவையான சரக்குகளை முகவர்கள், பல்வேறு மையங்களிலுள்ள இடைத்தரகர்கள் மூலம் பெற்று வருகிறேன். ஆனால் தற்பொழுது தினசரி சந்தை நிலவர இணையதளம் வந்த பிறகு எனக்கு நிறைய தகவல் தொடர்புகள் உற்பத்தியாளர்களிடத்திலும், வாங்குபவர்களிடத்திலும் ஏற்பட்டது. என்னால் பல்வேறு சந்தைகளின் காய்கறி விலை நிலவரங்களை அறிய முடிகிறது. விலையானது ஏற்றத்தாழ்வுகளை கொண்டது. மேலும் இது அந்தந்த நாளில் வரத்து மற்றும் தேவைகளின் அடிப்படையில் மாறப்படும். ஆனால் தற்பொழுது பல்வேறு மாநிலங்களில் உள்ள முதன்மை உற்பத்தியாளர்கள் அல்லது

விவசாயிகளிடமிருந்து தொலைபேசி அழைப்புகளை பெறுகிறேன். அவர்கள் சரியான விலைக்கு தங்களின் சரக்குகளை அளிக்க தயாராக உள்ளார்கள். இது பரஸ்பரம் அவர்களுக்கும் எனக்கும் நன்மையாக உள்ளது. பரஸ்பரம் அவர்களுக்கும் எனக்கும் நன்மையாக உள்ளது. சில சமயங்களில் சில்லறை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களும் என்னிடம் நேரடி வியாபாரத்திற்கு வருகிறார்கள். ஒரு ஜன்னலின் மூலம் பரவலான விலை நிலவரங்களை வழங்கும் சேவைகளை வழங்குகிறது. சிறப்பான தொடர்புகள், வேகமான பரிவர்த்தனைக்கு உதவுதல், நேரம் சேமிப்பு, சிறந்த சேவை மற்றும் சரியான விலை ஆகியவைகளை வழங்கும் தினசரி சந்தை நிலவரத்திற்கு எனது நன்றி.